ISSN : 2456-821X    அவையம் 2 (1) 2018 P.No. : 59-62

புதிய அவையம்

## மனித நல்வாழ்வுக்கு மு.வ காட்டும் வழிகள்

***முனைவர்*** *அரங்க.மணிமாறன்*
*முதுகலைத் தமிழாசிரியர்*
*அரசு ஆண்கள் மேனிலைப்பள்ளி*
*செங்கம்-606701*
*திருவண்ணாமலை மாவட்டம்.*

**கட்டுரை பெறப்பட்டது : 15.04.2018**    **ஏற்கப்பட்டது : 03.05.2018**

*மு.வ என அழைக்கப்படும் மு.வரதராசனார் தமிழ்மொழிக்கு மூவா மருந்தளித்தவர். சிறந்த இலக்கிங்களைப் படைத்தவர். மொழியியல் வல்லுநர். பன்மொழி அறிஞர். எண்பதிற்கும் மேற்பட்ட நூல்களை தமிழிற்கு யாத்தளித்தவர். இவை உலக மொழியாம் ஆங்கிலத்திலும் இந்தி முதலிய வட இந்திய மொழிகளிலும் தெலுங்கு முதலிய தென்னிந்திய மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டவை.*

*எளிமையான மொழிநடை திருக்குறள் முதலிய சிறந்த நூல்களிலிருந்து மேற்கோள் அமைப்பு அல்லி பாரி முதலிய தூய தமிழ் பெயர்கள் பெற்ற கதைமாந்தர்கள் ஆகியவை கொண்ட நூல்களைப் படைத்தவர். சுருங்கச் சொன்னால் அவரைப்போலவே அவரது இலக்கியங்களும் மென்மனம் படைத்தவை; வன்முறை இல்லாதவை; நெறிபடுத்துபவை.*

*நல்வாழ்வு :*

*பிறப்புக்கும் இறப்புக்கும் இடையிலான பயணம் மனித வாழ்வு. இம்மனித வாழ்வு உய்ய பல்வேறு சித்தர்களும் பனியர்களும் வாழ்வியல் நெறிகளைக் கூறிச்சென்றனர். அவ்வழியில் பெருந்தகை மு.வ அவர்கள் மனித வாழ்வு உய்ய கூறும் நல்வழிகளை*



புதிய அவையம்

விளக்குகிறது இக்கட்டுரை. நல்வாழ்வு எனும் இந்நூல் பத்து முத்தான கட்டுரைகளைக்கொண்டுள்ளது.

வழிபாடு

இன்றைய உலகம் அறிவியல் உலகம.; அத்தகு அறிவியல் உலகத்தால் கூட சில நிகழ்வுகளுக்கு ஏன் எதற்கு என்று காரணம் கூற முடியாது. மனித ஆற்றலைக் கடந்த ஒரு சக்தி உள்ளது. அது சிந்தையும் சொல்லும் கடந்த ஒன்றாகும். அந்த ஒன்று கடவுளாகும். அந்தக்கடவுள் நெறியில் அன்பும் உண்மையும் ஒளிர்கிறது. அந்நெறியில் வாழ்க்கை நடத்தினால் அவ்வாழ்வு எளிதாக அமையும்.

அன்பு நெறியில் இல்லறத்தை நடத்தினால் அது தவவாழ்வை விட உயர்ந்ததாக அமையும் என்கிறார். கடவுளுக்கு வடிவங்கள் கற்பிப்பதும் செலவு செய்து சடங்குகள் நடத்துவதும் தேவையில்லை. சமய நிந்தைகளும் வாதங்களும் தேவையற்றவை.

இறைவன்

‘அன்பெனும் பிடியில் அகப்படும் மலையே
அன்பெனும் குடில் புகும் அரசே’

என்று இராமலிங்க வள்ளலார் போன்றோரால் அடையாளம் காட்டப்பட்டுள்ளார் என்றும் கூறுகிறார். நிலையாமை உள்ள உலகில் நிலைப்பெற்ற பெருந்தொடர்பான பரம்பொருளை நினைந்து போற்றவேண்டும். இவ்வாறு சான்றோர்களின் வழியில் கடவுளை உணர்வதே மெய்யுணர்வாகும்.

நாளும் நாம் கடவுள் வழிபாடு செய்வது உள்ளத்தை உயர்த்தும்.அமைதி கிடைக்கும்.

பேராற்றல் கொண்ட இறைவன் ஒன்றான பரம்பொருளாக உணரவேண்டும். வீண்வாதங்கள் பேதங்கள் கூடாது. ஆற்ற இருக்கும் கடமைகளுக்கு வழிகாட்டவும் அறிவும் ஆற்றலும் பெறவும் இறைவழிபாடு தேவை என வலியுறுத்துகிறாh.;

நல்லவர் வாழ்வு

இன்று நாம் பல முன்னேற்றங்களைக் கண்டுள்ளோம். பல வசதிகளைப்பெற்றுள்ளோம். ஆனால் எங்கே நிம்மதி என்று உரக்கப்பாடும் நிலைதான் பெற்றுள்ளோம். முன்னோர்கள் கூறிய அறநெறிகள் தேய்ந்த பாதைதான். ஆனால் அது அன்புநெறிகொண்ட பாதை.

அன்பும் நற்பண்பும் நிறைந்த வாழ்வே வீட்டிலும் வெளியிலும் இன்பம் பயக்கும். தீயோர் வளவாழ்வு வாழ்ந்தாலும் அது நிலைப்பதில்லை. 'கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே" எனும் கருத்தை வலியுறுத்துகிறார்.அறநெறியில் மட்டுமே இன்பம் பெற முடியும் என்ற புத்தரும் திருவள்ளுவரும் கூறிச்சென்றனர். இதை பின்பற்றி நல்லநெறிகளில் வாழ்க்கையை நடத்திச்செல்ல வேண்டும் என்கிறார் மு.வ.

ஊனுடம்பு ஆலயம்:

‘சுவர் இருந்தால்தான் சித்திரம் எழுத முடியும்’ என்பது நம் முன்னோர் வாக்கு.மனிதன் சிறப்பாக வாழ உடல் நலம் இன்றியமையாதது.அவ்வுடலை சிறந்த முறையில் பேணிப் பாதுகாக்கவேண்டும். அளவான உணவு அளவான உழைப்பு அளவான உறக்கம் வேண்டும் என்கிறார். மிகுதியாக உண்பது நோய்களுக்கு வழிவகுக்கும். உணவுப்பொருட்களை முக்கால் வேக்காட்டுடன் உண்டால் சத்து முழுமையாகக் கிடைக்கும் என்கிறார்.

உடம்பு கடவுள் தந்த அருமையான கருவி. அதை நெடுங்காலம் பயன்படுத்திக்கொள்ளும்படி காப்பாற்ற வேண்டும் என்கிறார் மு.வ.

சிக்கன வாழ்வே சிறந்தது:

துறவிகள் குடும்ப வாழ்வைத் துறந்து எளிமையாக வாழ்கிறார்கள். குடும்பத்தில் இருந்தாலும் ஆடம்பரத்தையும் ஆசைகளையும் துறந்து வாழ்ந்தால் அது எளிமையானதாகவும் இனிமையானதாகவும் அமையும்.

காந்தியடிகளும், விவேகானந்தர் போன்றோர்களும் வசதி வாய்ப்பு நிலைகளிலும் எளிமையாக வாழ்ந்தனர். பிறர்க்கும் அவ்வாழ்வையே போதித்தனர்.

பட்டாடை உடுத்துவதைவிட பருத்தியாடை உடுத்தி மகிழவேண்டும். எளிமையான வாழ்க்கையில் மட்டுமே மன அமைதிக்கிட்டும் குடும்பவாழ்விலும் திருமணம் போன்ற நிகழ்வுகளிலும் செய்யப்படும் ஆடம்பர செலவுகள் மனக்குறையில் போய்முடியும். ‘ஆசைக்கு ஓர் அளவில்லை’ என்ற தாயுமானவரின் வாக்கை உணர்ந்து எளிமையாக சிக்கனமாக வாழக்கற்றுக்கொள்ளவேண்டும் என்கிறார் மு.வ.

கடமைசெய்து உரிமைபெறுக:

நாம் இவ்வுலகில் வாழ்வதற்கான அத்தனை உரிமைகளையும் பெற்று வாழ்கிறோம். தந்தை தன் குடும்பத்திற்கு உழைத்து பொருளீட்டி குடும்பத்தை நடத்துகிறார்.அவருக்கு அந்தக் கடமை இருக்கிறது. அவ்வாறே சமுதாயத்திலும் சில விதிகளுக்கு கட்டுப்பட்டு



பதிப்பு இணையம்

நடக்கவேண்டும். சமுதாய வளர்ச்சிக்காக தன்னுடைய கடமைகளை உழைப்பைத் தரவேண்டும் அன்பும் தேசபக்தியும் கொண்டு உழைத்து நாட்டின் அமைதிக்கும் வளர்ச்சிக்கும் தொண்டாற்றிட வேண்டும்.

அவரவர் வேண்டும் உரிமைகளுக்கு ஏற்ப கடமைகளையும் மதித்து செய்ய வேண்டும் என்கிறார் மு.வ.

புலனடக்கம் தேவை:

புலனடக்கம் என்றால் எல்லாவற்றையும் விட்டுவிடுவது என்பது பொருளல்ல. மனதிற்கும் உடலுக்கும் எது கேடு விளைவிக்குமோ துன்பத்தைக் கொடுக்குமோ அவற்றை விட்டுவிடுதலே புலனடக்கம் என்கிறார். மது பழக்கம் கேளிக்கை சீட்டாட்டம் குத்துச்சண்டை திரைப்படங்கள் பார்ப்பதைத் தவிர்க்க வேண்டும். இயற்கையை ரசிப்பதிலும்,இனிய பாடல்களைக் கேட்பதும் மழலைகளின் மொழிகளைக் கேட்கவும் வேண்டும் என்கிறார்.

தீமைகளை விட்டொழித்து நன்மைகளை அறியவும் தேவையான மனவலிமைகளை மக்கள் பெற வேண்டும். தோட்டங்களை வளர்த்து அதில் ்க்கும் மக்களின் அழகிலும் தென்றலின் குளிர்ச்சியிலும் மகிழவேண்டும் என்கிறார்.

முடிவுரை

அன்பு அமைதியைக் கொடுக்கும். உழைப்பு உயர்வைக் கொடுக்கும் ‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’ என வாழ்வதே பொதுமை வாழ்வு. சாதி சமய பூசல்கள் கூடாது உலகின் அமைதிக்கும் உயர்வுக்கும் தன் பங்கை அறநெறியில் ஆற்றிட வேண்டும் என்பதே மனித நல்வாழ்விற்கு மு.வ காட்டும் வழியாக அமைகிறது என்பது தெளிவாகிறது.

பதிப்பகம் அகமொழி